IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.257/2022

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | PERUMAL |
| FATHER'S NAME | : | PARASURAMAN |
| VILLAGE | : | MELPATTI |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 9th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேல்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2013ஆம் வருடம் காவல் ஆய்வாளராக திரு.சம்பத் அவர்கள் பணிசெய்த விவரம் எனக்கு தெரியும். அவர் தற்போது பணிமாறுதலில் சென்றுவிட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 28.01.2013ம் தேதி மதியம் 01.15 மணிக்கு இவ்வழக்கின் முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி திரு.சம்பத் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது குடியாத்தம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பெருமாள் த/பெ. முருக கவுண்டர் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.20/2013 இதச பிரிவுகள் 147, 294 (பி), 323, 324 என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

மறுநாள் 03.02.2013ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் பாபு மற்றும் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து அரைசெங்கல் மற்றும் சிறிய மண்வெட்டி கைப்பற்றுதல் மகசர் செய்து கைப்பற்றினார். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம

நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். பின்னர் சாட்சிகள் பெருமாள், செல்வி, முருகன் , சேட்டு முரளிகுமார் , வெங்கடேசன், ஆறுமுகம் மற்றும் பாபு ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளைத் தேடி வந்த நிலையில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் எதிரிகள் தாமாக நீதிமன்றத்தில் ஆஜராகி தக்க பிணையம் சென்றனர். பின்பு அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றார்.இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 6 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும், அ.சா.1 ற்கு வழங்கிய விபத்துபதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், காயசான்று அ.சா.அ.9 ஆகவும், அ.சா.2ற்கு வழங்கிய விபத்துபதிவேடு அ.சா.ஆ.10 ஆகவும், காயசான்று அ.சா.அ.11 ஆகவும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் சொன்னபடி வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**